RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1625

# சேலம் மாவட்ட கோம்பைப்பட்டி மக்களின் நாட்டுப்புற மருத்துவம்

**செ. பிரேமாவதி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# Siddha Medicine used by Gombaipatti People in Salem District

**S. Premavathy** [a, *]

[a] Department of Tamil, Padmavani Arts & Science College for Women, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: premavathys1985@gmail.com

Received: 17-06-2022
Revised: 23-09-2022
Accepted: 24-10-2022
Published: 12-12-2022

Check for updates

**ABSTRACT**

Even today siddha medicines are very useful for people. In India no great medical research is undertaken for siddha medicines. Seekan Balku undertook a research on the medical notes written in palm print manuscripts. Natural medicinal products such as turmeric, ginger, pepper is used by Tamil people on a daily basis. All of these products are anti-inflammatory and so led a healthy life. Having all these products daily prevents various disease. These products are used in siddha medicine. People believe that the mantras used by people can bring prosperity.

**Keywords:** Siddha Medicine, Natural Medicinal, Turmeric, Ginger, Pepper.

## முன்னுரை

நாட்டுப்புற மக்களின் பண்பாட்டோடும் பழக்கவழக்கத்தோடும் ஒன்றியிருப்பது நாட்டுப்புற மருத்துவம் ஆகும். அறிவியல் நாகரிகமும் இயந்திர வளர்ச்சிப் பெற்ற இக்காலத்தில் கூட இயற்கை மருத்துவத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. நாட்டுப்புற மருத்துவத்தை வீட்டு வைத்தியம், பாட்டி வைத்தியம், கை வைத்தியம், நாட்டு வைத்தியம் என்ற பல்வேறு பெயர்களின் வழங்கப்படுகிறது. பலநோய்களுக்கு ஆங்கில மருத்துவத்தில் மருந்து இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்பதற்குத் தற்போதுள்ள கொரானவே சாட்சியாக உள்ளது. ஆதிகாலத்தில் மனிதன் காலில்பட்ட காயத்திற்கு அருகில் உள்ள பச்சிலைகளைப் பறித்து மருந்தாகப் பயன்படுத்தினான். பிறகு நாகரீகம் வளர அறிவு பூர்வமாக இந்நோய்க்கு இந்த இலை, வேர், பழம், விதை என மருந்து என்று கண்டுபிடித்து பயன்படுத்தப்பட்டது. நாட்டு மருத்துவம் எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நாட்டுப்புற மருத்துவ வகைகள்

நாட்டுப்புற மருத்துவத்தை இரண்டாகப் பிரிக்கலாம்.

1. இயற்கை மருத்துவம் (Natural Folk Medicine)
2. மந்திர சமய மருத்துவம் (Magico- Religious Medicine)

## இயற்கை மருத்துவம்

இயற்கையான செடி, கொடி, விதை, மலர், பட்டை போன்றவற்றால் ஆன மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்தே இயற்கை மருத்துவமாகும். மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உட்கொள்ளும் மருந்து, வெளிப்பூச்சு மருந்து என இரண்டு வகையாகப் பயன்படுத்தப்படுகிறது. வீடுதோறும் உள்ள முதியவர்களும் அனுபவசாலிகளும் சிறந்த நாட்டுப்புற மருத்துவர்களாக விளங்குகின்றனர்.

மருத்துவ முறையைச் செவி வழியாகவே கேட்டு, அறிந்து பழக்கமும் பயிற்சியும் துணைக்கொண்டு கிராமப்புற மக்களுக்கு உதவுகின்றனர். இம்மருத்துவ முறையை எழுதப்படாத மருத்துவ முறை எனக் கூறப்படுகிறது. நவீன மருத்துவம் மஞ்சள் காமாலைக்கு இன்றுவரை சரியான மருந்து கண்டுபிடிக்கவில்லை. நாட்டுப்புற மருத்துவத்தில் இந்நோய்க்குச் சிறந்த மருந்தாகக் கரிசிலாங்கண்ணியும் கீழாநெல்லியும் உள்ளது. உலகையே புரட்டிப்போட்ட கொரானா என்ற நோய்க்குக் கபசுரக் குடிநீர் (15 மூலிகைப்பொருட்கள்) மருந்தாக உள்ளது.

1. ஆடாதொடா இலை, 2. சிறுதேக்கு, 3. கரிசிலாங்கண்ணி, 4. சுக்கு, 5. திப்பிலி, 6. சிறுகாஞ்சேரி வேர், 7. அக்ரகாரம், 8. முள்ளிவேர், 9. கற்பூரவள்ளி இலை, 10. கோஷ்டம், 11. சீற்றில் தண்டு, 12. நிலவேம்பு சமூலம், 13. வட்டத் திருப்பி வேர், 14. கோரைக்கிழங்கு, 15. கடுக்காய் தோல், கபசுரக் குடிநீர் சளி, காய்ச்சல், களைப்பு, உடல்வலி ஆகியவற்றைப் போக்கும் திறன் கொண்டதாகும். மேலும் டெங்கு காய்ச்சலுக்கு நிலவேம்பு கசாயம் என்னும் மருந்து பயன்படுகிறது. “குருதி அழுத்த நோய்க்கு சர்பாசிஸ் ஒரு மருந்து. இதனைப் பீகார் மாநிலத்திலத்துப் பழங்குடி மக்களின் மருந்தான சர்ப்பகந்திச் செடி மூலம் தயாரித்தனர்” (Subramaniyan, 2004). என்ற கருத்திலிருந்து நவீன மருந்தைக் காட்டிலும் இயற்கை மருத்துவம் மக்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது என்பதை அறியமுடிகிறது.

## மருத்துவக்குறிப்புகள்

நாட்டுப்புற மருத்துவம் நாட்டுப்புற மக்களின் அறிவில் உதித்து அனுபவத்தில் தழைத்து, வாழையடி வாழையான வாய்மொழியாக வாழ்ந்து வளர்ந்து வருபவை ஆகும். மருத்துவக்குறிப்புகள் சிலர் வெளிப்படையாகக் கூறாமல், தங்களது பாடல்களின் மூலம் கூறுவர்.

“உடம்பெல்லாம் நோகுதம்மா? கண்ணே

உனக்கு ஒத்தடம் தான் கொடுக்கட்டுமா?

ஏலமும் இஞ்சிச்சாறும் - கண்ணே உனக்கு

எட்டுச் சொட்டுக் கொடுக்கட்டுமா?”

என்ற பாடல்வரிகளின் வழியாக உடம்பு வலி இருந்தால் ஒத்தடம் கொடுக்காமல், அதற்கு மருந்தாக ஏலக்காயும், இஞ்சிச்சாறும் சேர்த்து எட்டுச் சொட்டு கொடுத்தால் சரியாகிவிடும் என்பதை அறியமுடிகிறது (Jaganathan, 1958).

உணவே மருந்து என்ற பழமொழிக்கேற்ப கிராமப்புற மக்கள் தினமும் தங்களது உணவு முறைகளில் இஞ்சி, பூண்டு, கொத்தமல்லி, கருவேப்பிலை, கிருமி நாசினியான மஞ்சள் போன்ற மருத்துவ குணமுள்ள பொருட்களைச் சமையலுக்குப் பயன்படுத்துகின்றனர். 1. துளசி, வெற்றிலை, கற்பூரவள்ளி ஆகியவற்றைத் தண்ணீரில் சேர்த்து கொதிக்கவைத்து வடிகட்டிய பிறகு, அந்நீரை குடித்தால் நெஞ்சுசளி குறையும். 2. கிணற்றுப்பூண்டு தழையை எடுத்து கசக்கி உடம்பில் புண்ணாக இடத்தில் வைத்துக் கட்டுப்போட்டால் குணமாகும். இதனால் நாம் ஆரோக்கிய வாழலாம் என்பதை உறுதிபடக்கூறமுடிகிறது (Chandran, 2022, Age 60, Personal Interview, Salem, India).

## நம்பிக்கை மருத்துவம்

கிராமங்களில் வீடுதோறும் திருஷ்டி போக வீட்டிற்குமுன் வாசலில் மேல்பகுதியில் கொப்பர தேங்காய், மிளகாய், படிகார கல் போன்ற பொருட்களைக் கட்டி வைப்பர். இதில் அறிவியல் பூர்வமான அதாவது இவை அனைத்தும் மருத்துவக் குணமுள்ளவை என்பதால் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு முன்னோர்கள் பழக்கவழக்கங்களில் பயன்படுத்தினர்.

மனிதர்களுக்கு இரவு நேரங்களில் விஷக்கடி ஏற்பட்டு விட்டால் அதற்கு மருந்தாக கொப்பரத்தேங்காய் உதவுகிறது. படிகார கல்லிலானது கிருமி நாசினியாகப் பயன்படுத்தப்படுகிறது. மூலிகைச் செடிகளை வீட்டில் வளர்க்கப்படுவதால் காற்றில் உள்ள கிருமிகளை அழித்து, மனிதர்களுக்குத் தூய்மையான காற்றைத் தருகிறது. இவையெல்லாம் அறிவியல் ரீதியாகவும் உறுதிபட ஆய்வுச் செய்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

பழமொழியாக மருத்துவத்தைப் பற்றிக் கூறப்படுகிறது.

“ஆற்றுநீர் வாதம் போக்கும்

அருவிநீர் பித்தம் போக்கும்

சோற்றுநீர் இரண்டும் போக்கும்”

போன்ற பழமொழிகள் இன்றும் பெரியோர்களால் கூறப்படுகிறது. பழமொழிகளை அடிப்படையாக வைத்து டாக்டர் க. வெங்கடேசன் அவர்கள் சில வகைகளாகப் பிரித்துள்ளார். “நோய்களைப் பற்றி கூறும் மருந்து முறைகளைக் குறிப்பிடும், மருந்து செடிகொடிகளைப் பற்றிக்கூறும்” என்ற கருத்தினை நோக்கும்போது பழமொழிகளை முன்னோர்கள் அனுபவித்து சூழலுக்கேற்ப கூறப்பட்டவை என அறியமுடிகிறது (Venkatesan, 1976).

## மந்திரசமய மருத்துவம்

நம்பிக்கை அடிப்படையில் மனிதனுக்கு அப்பாற்பட்ட ஆற்றல் உலகைக் கட்டுப்படுத்துகிறது என்ற செயல்பாடு கொண்ட அமைப்பைச் சமயம் என்று கூறப்படுகிறது. மந்திரம் என்ற சொல்லுக்கு வரலாற்று முறைத் தமிழ் இலக்கியப் பேரகராதி “நிறைமொழி மாந்தர் ஆணைச்சொல், ஆலோசனை, இரகசியம், செவிச்சொல், மறைவில் பேசிக் கொள்ளும் பேச்சு, மந்திரமலை, ஆராய்தல், நினைப்பவனைக் காப்பது, பிரணவம், மாளிகை, வீடு, மந்திர சபை, உறைவிடம், அரண்மனை வேதமந்திரம், அஷ்டாட்சர மந்திரம், குதிரைச்சாலை, கோயில், குதிரைப் பந்தி, வேதாங்கம் ஆறனுள் ஒன்று. தேவர் கோயில், கள், சூழ்ச்சி, எண்ணம், பிரமம், மனு” எனும் பொருள் விளக்கத்தைத் தருகிறது.

## மந்திரங்கள்

மந்திரம் இரண்டு வகைப்படும். அவை தூய மந்திரம், தீய மந்திரம், தூய மந்திரமானது ஒரு தனிமனிதன் அல்லது ஒரு சமூகத்தின் நலனுக்குப் பயன்படுகிறது. தீய மந்திரமானது கெடுதலுக்குப் பயன்படுகிறது. பல மந்திரங்கள் மருத்துவ மந்திரங்களாக உள்ளன. மந்திரங்கள் மக்களுக்கும், மாக்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இம்மந்திரங்கள் மக்களின் நம்பிக்கைக்குரியதாகவும் உள்ளன.

## மந்திரம் பயன்படுத்தும் விதம்

முதன்முறையாக எந்தவொரு மந்திரத்தையும் பயன்படுத்துவதற்கு முன்பு அவரவர் விருப்பத்திற்குரிய ஒரு கடவுளை மனதில் நினைத்து, மனதை ஒருநிலைப் படுத்தி மந்திரங்களை 1008 முறை சொல்ல வேண்டும் அதன்பின் மந்திரம் சொல்பவர் யாருக்கு வேண்டுமானாலும் பயன்படுத்துவார். மந்திரம் சொல்பவர் மந்திரத்தை உச்சரிக்கும் பொழுது உதட்டையும் நாக்கையும்

அசையாமல் மனதிலே சொல்லுவார். ஏனெனில் வெளிப்படையாக மந்திரத்தை ஓதினால் மந்திரம் பழிக்காது என்ற நம்பிக்கை அவர்களிடையே நிலவுகிறது இதிலிருந்து அவர்கள் நல்முறையில் மந்திரத்தைக் கற்றுக் கொண்டு முறையாய் பயன்படுத்த வேண்டும் என்பதை அறியமுடிகிறது.

## குழந்தைப் பயம் நீக்குவதற்கான மந்திரம்

குழந்தைப் பயிற்று கொண்டாளே அல்லது குழந்தைக்கு உடல்நிலை சரியில்லை என்றாலோ, மந்திரம் சொல்பவர் எக்குழந்தைக்கு உடல்நிலை சரியில்லையோ அக்குழந்தையை மனதில் நினைத்துக் கொண்டு, ஒரு காகிதத்தில் திருநீற்றைச் சிறிதளவு தாளில் எடுத்துக் கொண்டு,

"மழைமேல் நின்று மலைமேல் குறத்தி

ஆகாசம் படிபட என் காலிலே கருவி

கட்டி கால் நோவு கண நோவு சாய நோவு

மூக்கு படைத்த முப்பாறு வியாதியும்

நாக்கைப் பிடித்த 4448 வியாதியும்

மனநோவை விட்டு விண்ணுலோகம் போக சிவா,

காது குளிர்ந்து, கண் குளிர்ந்து, குரல் குளிர்ந்து,

உடல் குளிர்ந்த காலினால் மோந்தரங்கி போ சிவசிவ சிவா"

என்ற மந்திரத்தை மூன்று முறை சொல்கிறார் (Senkuttuvan, 2022, Age 66, Personal Interview, Salem, India). பிறகு அத்திருநீற்றை அக்குழந்தையின் நெற்றியில் பூசிவிடுவார். அக்குழந்தை பயத்திலிருந்து தெளிவு பெற்று குணமாகிறது.

## சுருக்கைப் போக்கும் மந்திரம்

யாருக்கவது உடம்பில் எந்தவொரு பகுதியில் சுருங்கி (உடம்பில் நரம்பு பிடித்தல்) ஏற்பட்டிருந்தால் மந்திரம் சொல்பவரை நாடி வருவர். மந்திரம் சொல்பவர் உடம்பு சரியில்லாதவரைக் கிழக்குப் பக்கம் பார்த்து நிற்கும்படி சொல்வார். மந்திரம் சொல்பவர் கையில் துடைப்பக்குச்சி மூன்று எடுத்து அவருக்கு எந்தப் பகுதியில் சுளுக்கு உள்ளதோ அங்கு,

"கட்டு சுளுக்கு ஓடு ஓடு நசி நசி

சிவசிவ சிவா"

என்ற மந்திரத்தை ஒன்பது முறை சொல்லி நீவி விடுவார் (Kumarasami, 2022, Age 85, Personal Interview, Salem, India). பிறகு அக்குச்சிகளை உடைத்து விடுவார். சிறிய நேரம் உடம்பு சரியில்லாதவர் தூங்க வேண்டும். அதன்பிறகு அவருக்கு உடம்பு சரியாகிவிடும் என்ற நம்பிக்கை நிலவி வருகிறது.

## முதுகில் வாயுப்பிடிப்பைப் போக்கும் மந்திரம்

ஒருவருக்கு முதுகுபுறத்தில் வாயுபிடிப்பு இருந்தால், அவரை மந்திரம் சொல்பவர் கிழக்குப் புறமாக நிறுத்தி வைத்து, மூன்று துடைப்பக் குச்சியைக் கையில் எடுத்து,

"சென்னிலே ரங்கசிவமல ரங்க

சேர்ந்து போ சிவ சிவ சிவா"

என்ற மந்திரத்தை ஒன்பது முறை சொல்லி நீவி விடுவார். அக்குச்சிகளை உடைத்து எறிந்து விடுவார் (Senkuttuvan, 2022, Age 66, Personal Interview, Salem, India). மேற்கண்ட மந்திரங்கள் யாவும்

மனிதர்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதே போல் விலங்கினங்களுக்கும் சில மந்திரங்களைப் பயன்படுத்தப்படுகிறது என்பதை இனிக் காண்போம்.

## பசு மாட்டிற்கு மடிகட்டினால், அதனைப் போக்குவதற்கான மந்திரம்

மந்திரம் சொல்பவர் கையில் ஒரு சொம்பு நிறைய, தண்ணீர் எடுத்துக் கொண்டு அதில் மூன்று வேப்பங் குச்சியை வைத்துக் கொள்வார். அதன்பிறகு எந்தப் பசு மாட்டிற்கு மடி கட்டிக் கொண்டதோ அந்த மாட்டிற்கு அருகில் சென்று,

"அங்கம் பெருக்க யானை மேதக்க

கொங்கை சுரக்க ஓம் சிவாய நமஹ"

என்ற மந்திரத்தைப் பத்துமுறை சொல்லிக் கொண்டே, சொம்பு தண்ணீரிலுள்ள வேப்பங்குச்சியைத் தண்ணீரில் சுற்றிக் கொண்டு, அத்தண்ணீரை பசு மாட்டின் படி மீது தெளிப்பார். பிறகு அவ்வேப்பங்குச்சியை உடைத்து விடுவார்.

## மாட்டிற்கு உடல்நிலை சரியிலலை எனில் அதனைப் போக்குவதற்கான மந்திரம்

மாட்டிற்கு உடல்நிலை சரியில்லை என்றால் மந்திரம் சொல்பவர் வெள்ளெருக்கங்காத்து மூன்றினைக் கையில் எடுத்துக் கொண்டு அம்மாட்டிற்கு,

"மலைமேல் நின்று

.................................. 4448

வியாதியும் கண்குளிர்ந்து உடல்குளிர்ந்து

தானாக காலால் இறங்கி வாலினால்

இறங்கி தானாக போ சிவ சிவ சிவா" (Velmurugan, 2022, Age 50, Personal Interview, Salem, India)

என்ற மந்திரத்தை மூன்றுமுறை சொல்லி, அவ்வெள்ளெருக்கங் கொத்தினால் அம்மாட்டை நீவி விட்டு, அக்கொத்தினை உடைத்து விடுவார். இதன் பிறகு அம்மாட்டிற்கு உடல்நிலை சரியாகும் என்ற நம்பிக்கை இவ்வூர் மக்களுக்கு உள்ளதை அறியமுடிகிறது.

## முடிவுரை

இயற்கை மருத்துவத்தில் ஒவ்வாமை போன்ற சிக்கல்கள் இல்லை. பக்கவிளைவுகள் அற்ற பாதுகாப்பாகவும் பொருளாதாரத்தில் கீழ் உள்ள மக்களுக்குச் சிக்கனமாகவும் இயற்கை மருத்துவம் பயன்படுகிறது என்பதை அறியமுடிகிறது. நாட்டுப்புற நம்பிக்கைகளில் மந்திர மருத்துவமும் ஒன்றாகத் திகழ்கிறது. மந்திரங்களில் பெரும்பாலும் நோய்தீர்க்கும் மந்திரங்களாகவே உள்ளன. இவ்வகையான மந்திரங்கள் சேவை அடிப்படையிலேயே இன்றும் கிராமங்களில் செயல்படுகிறது. இதற்கான கட்டணங்கள் வாங்கவில்லை என்பதையும் அறியமுடிகிறது.

## References

Jaganathan, K.V. (1958) Malaiaruvi, Saraswathi Mahal Library, Thanjavur, India.

Subramaniyan, S.Ve. (2004), Nattupuraviyal, Kavya Pathipagam, Chennai, India.

Venkatesan, K. (1976) Aaaivu Nokkil Nattupura Maruthuvam, Sidhar Kottam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License